சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.02/2025</u>

09.04.2026

வா.சா.1 திரு. சாமிநாதன், த/பெ.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். ரோஜாபீவி சொல்லிதான் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வந்தேன். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியும். வடக்கு, கிழக்கு - ரோஜாபீவி இடம், தெற்கே - சுப்பிரமணியன் இடம், மேற்கே - ரோடு வாய்க்கால் உள்ளது. வாய்க்கால் பெயர் தெரியாது. ரோஜாபீவி அத்திக்கடையில் வசிக்கிறார் என்றால் சரிதான். ரோஜாபீவி தாவா சொத்திற்கு வந்ததில்லை என்றால் சரியல்ல, வந்துள்ளார். தாவா சொத்தில் தற்போது ஐ.ஆர்.20 நெல் போட்டிருந்தார். ரோஜாபீவி தாவா சொத்தில் 2015 ஆம் வருடத்திலிருந்து சாகுபடி செய்துவருகிறார். ஐ.ஆர்.20 நெல்லை 2026 ஆம் வருடம் அறுவடை செய்தார், நான் அறுவடை செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி உத்திராபதி குடும்பத்தினர் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றாலும் நான் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.